செ.வெ.எண்:56 நாள்:27.10.2021

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (27.10.2021) ஊரக வளர்ச்சித்துறை திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (27.10.2021) ஊரக வளர்ச்சித்துறை திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்தில் சிறப்பு தன்னிறைவு திட்டம், சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டம், பிரதம மந்திரி ஆவாஸ் கிராம யோஜனா திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், மாநில நிதிகுழு மானியம் மற்றும் ஊரக நீர்நிலைகள் மேம்பாட்டுத்திட்டம் (புனரமைப்பு), தேசிய கிராம சுயாட்சி திட்டம் மற்றும் குக்கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, சாலை பணிகள், பசுமை வீடுகள் கட்டுமான பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும். மேலும், குடிநீர் திட்ட பணிகள், தெரு விளக்கு வசதிகள் போன்ற பொதுமக்களின் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து ஊராட்சிகளிலும் மழைக்கால நோய்த்தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் சீரமைக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இவ்வாய்வின்போது, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.எஸ்.வெங்கடாசலம் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊரக வளர்ச்சித்துறை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**